# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்புக் கருத்திட்டம் (TNSWSP)

# பதவி வெற்றிட அறிவித்தல்

வர்த்தகர்கள் நாட்டின் எல்லைக்கு குறுக்கான தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கான (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பரிமாற்றங்கள்) ஆவணங்கள் மற்றும் தரவுத் தேவைகளை எல்லை வர்த்தக ஒழுங்குமுறை முகவர் நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கான ஒற்றை நுழைவுப் புள்ளியாக வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வகையான செயல்முறைகளின் இறுதி விளைவானது தானியங்கி வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பின் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.

இதன்படி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, முன்மொழியப்பட்ட வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக பிரத்தியேகத் திட்ட அமுலாக்கப் பிரிவொன்றினை (PIU) நிறுவுவதற்கு தீர்மானித்துள்ளது. வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பின் கீழ் முன்மொழியப்பட்ட இப்பிரத்தியேக திட்ட அமுலாக்கப் பிரிவிற்கான பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**தகுதிகள்**

### 1) மாற்ற முகாமைத்துவம் மற்றும் திறன் விருத்தி நிபுணர் (PS3) – (01 – பதவி)

- வணிக முகாமைத்துவம் அல்லது நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட இளமாணிப் பட்டம். **அல்லது**
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்திற்கு நிகரான தகமை.
- தொடர்புடைய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட, ஏதாவது ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது. **மற்றும்**
- திறன் விருத்தி, பயிற்சி மற்றும் மாற்ற முகாமைத்துவம் தொடர்பாக அரசாங்க அல்லது பொதுத் துறையுடன் தொடர்புடைய கருத்திட்டத்தில் அல்லது வியாபார வசதிப்படுத்தலில் நேரடியான 8 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் விரும்பத்தக்கது. **மற்றும்**
- 4 வருடங்களுக்கு குறையாத முகாமைத்துவ மட்டத்திலான அனுபவம் விரும்பத்தக்கது.

### 2) கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அதிகாரி (PS5) - (01 – பதவி)

- வணிகம் அல்லது பொது நிர்வாகம், பொதுக் கொள்கை ஆகிய துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட இளமாணிப் பட்டம். **அல்லது**
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்திற்கு நிகரான தகமை.
- தொடர்புடைய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட, முதுமாணிப் பட்டம் விரும்பத்தக்கது. **மற்றும்**
- சிக்கலான கருத்திட்டங்களில் அல்லது ஓரே அளவான மற்றும் ஓரே மாதிரியான நோக்கமுடைய நிறுவனங்களில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பாக ஆகக்குறைந்தது 3வருட சேவை அனுபவம்.(ஒரு அரசாங்க நிறுவனத்திலான அனுபவம் விரும்பத்தக்கது) **மற்றும்**
- 01 வருடத்திற்கு குறையாத முகாமைத்துவ மட்டத்திலான அனுபவம் விரும்பத்தக்கது.

**பொது நிபந்தனைகள்**

- வயது 2025.06.08 இல் உள்ளபடியாக 60 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் 24 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்படுவார்கள். இது வருடாந்திர செயல்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் ஆண்டுதோறும் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு உட்பட்டது.
- தேவையான அனைத்து தகுதிகளும் 2025.06.08 அன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
- வெற்றிடங்கள் நிரப்பப்படல் அவசியமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, அமைச்சின் செயலாளரையே சாரும்.
- இந்த ஆட்சேர்ப்புச் செயற்பாட்டின் போது இதில் இல்லாத ஏதேனும் ஒரு விடயத்திலோ அல்லது ஏதேனும் சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பத்திலோ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமானதாக அமையும்.
- 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி PS தரத்திற்கு உரித்துடைய சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் மற்றும் இதர சலுகைகள் வழங்கப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

தேசிய அடையாள அட்டை, தொழில் அனுபவம், கல்வி / தொழில் தகைமைகளுக்கான சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் இரு தொடர்பற்ற சான்றளிப்பவர்களின் தொடர்பு விபரங்கள் இணைக்கப்பட்ட விரிவான சுயவிபரக் கோவையானது (CV) பின்வரும் முகவரிக்கு 2025.06.21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலமாக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களினால் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

**முகவரி:**

பணிப்பாளர் நாயகம்
வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, அமைச்சு
செயலகம், கொழும்பு 01.

**ஆட்சேர்ப்பு முறை**

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன் கோரப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் பூரணப்படுத்தப்படாத சுயவிபரக்கோவையானது தகுதி நீக்கத்திற்கான ஒரு காரணமாக இருக்கும்.

பதவி விவரங்களின் சுருக்கம் உள்ளிட்ட மேலதிக விவரங்களுக்கு. **https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies**

**செயலாளர்**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, அமைச்சு**
**செயலகம், கொழும்பு 01.**

திகதி : 2025.06.08